இணைப்பு 01

பாராளுமன்றத்தில் அரசாங்க கணக்குக் குழுவினால் சபைப்படுத்தப்பட்ட அறிக்கை சம்பந்தமாக நிலையான கட்டளை 119 (4) கீழ் கௌரவ நிறுவன பொறுப்பு அமைச்சரின் மேற்பார்வை மற்றும் மேற்கொண்ட நடவடிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற அறிவிப்பு தொடரிலக்கம் :- 79

மாவட்ட செயலகம் :- **மொணராகலை**

அரசாங்க கணக்கு குழுவினால் கண்டறியப்பட்ட குறைப்பாடுகள்	அக்குறைபாடுகளை தவிர்த்துக் கொள்ள நிறுவனத்தினால் மேற்கொண்ட செயற்பாடுகள் / சமகால தேர்ச்சி
நிலையான சொத்து பதிவேட்டினை தரவேற்றப்படுத்தாப்படாமை	உத்தியோகத்தர்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நிலையான சொத்து பற்றிய தகவல்களினை 'சிகாஸ்' நிகழ்நிலையில் தரவேற்றப்படுத்துடன், காணி மற்றும் கட்டிடம் பற்றிய மதிபீட்டின் மதிப்பினை தரவேற்றப்படுத்தி நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
சட்டவிரோத முறையில் கையகப்படுத்தல் பற்றிய பதிவேட்டினை தரவேற்றப்படுத்தப்படாமை.	உத்தியோகத்தர்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து பிரதேச செயலகங்களின் சட்டவிரோத கையகப்படுத்தல் பற்றிய பதிவேட்டினை தரவேற்றப்படுத்தி நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
நீண்டகால உரிமம் வழங்கல் பதிவேட்டினை தரவேற்றப்படுத்தப்படுத்தப்படாமை	உத்தியோகத்தர்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து பிரதேச செயலகங்களின் நீண்டகால உரிமம் வழங்கல் பதிவேட்டினை தரவேற்றப்படுத்தப்பட்டு நடாத்தப்படுகின்றது.

செலவு பயன்பாட்டு பதிவேட்டினை தரவேற்றப்படுத்திய நிலையில் பராமரிக்கப்படாமை.	உத்தியோகத்தர்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. செலவு பயன்பாட்டு பதிவேட்டினை தரவேற்றப்படுத்தப்பட்டு நடாத்தப்படுகின்றது.
வருடாந்த செயற்திட்டம் தயாரிக்கப்படாமை.	வருடாந்த செயற்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும் முறையான படிவத்தினை பயன்படுத்தப்படாமை. இது பற்றி உத்தியோகத்தர்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 2023 மற்றும் 2024 வருடங்களில் முறையான படிவங்களினை பயனபடுத்தி செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் முன்வைக்கபட்ட தணிக்கை விசாரணையிற்கு ஒரு மாததிற்குள் பதில் சமர்ப்பிக்கத் தவறியமை.	பதில் அளிக்க கால அவகாசம் எடுக்கும் சந்தர்ப்பங்களில், இடைக்கால பதில்களை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், பிரதேச செயலகங்களின் கணக்காய்வு தொடர்பான அனைத்து உத்தியோகத்தர்களும் வரவழைக்கப்பட்டு, கணக்காய்வு தொடர்பான ஆலோசனை நடாத்தப்பட்டு, விரைவாக பதில்களைப் பெற, மற்றும் கணக்காய்வின் பின் விரைவாக பதில்களை சமர்பிப்பதாற்காக உத்தியோகத்தர்களுக்கு வழிகாட்டல்கள் போன்ற செயற்திட்டங்களினூடாக கணக்காய்வு தொடர்பான பதில்களை பெற்றுக்கொள்வதில் ஏற்படும் தாமதத்தினை குறைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உள்ளக கணக்காய்வின் பதிலினை ஒரு மாததிற்குள் சமர்பிக்கத் தவறியமை.	இது குறித்து பிரதேச கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் நிதமும் பின்தொடர்ந்து ஊக்குவிக்கப்படுகின்றது. கணக்காய்வு கண்கானிப்புக்களுக்கு தொடர்புடைய நேர்த்தியான பதிலினை தயாரித்தல் மற்றும் ஒவ்வொரு அவதானிப்புகள் தொடர்பாகவும் ஆலோசிக்கபட்டுள்ளது. உள்ளக கணக்காய்வின் பதிலினை பெற்றுக்கொள்வதின் தாமதத்தினை குறைக்க முடிந்துள்ளது.
மாவட்ட செயலகத்தின் கீழ் இயங்கும் பிரதேச செயலகங்களின் கணக்காய்வு குழு குறைந்தளவான எண்ணிக்கையிலோ அல்லது கூட்டம் கூடவில்லை.	நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமையின் காரணமாக 2022 ஆம் ஆண்டில், திட்டமிட்டபடி பிரதேச கணக்காய்வுக் குழு கூட்டம் நடாத்த முடியாவிடினும் 32 குழு வாரம் நடாத்தப்பட்டுள்ளது. கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்டம் பற்றிய விசேட கவனத்தினை செலுத்தி தேவையான நடவடிக்கைகளினை மேற்கொண்டதோடு, 2023 ஆம் ஆண்டிற்கான மாவட்ட செயலகத்தின் கீழ் இயங்கும் 11 பிரதேச செயலகங்களின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு 44 இன் கூட்டம் திட்டமிட்டபடி நடாத்தப்பட்டது.
2017.06.26 ஆம் திகதியின் இலக்கம் 01/2017 கொண்ட சொத்து முகாமைத்துவ சுற்று	தொடர்புடைய சுற்று நிருபத்தின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்து மற்றும் சிதைத்தல் பற்றிய தகவல்

நிருபத்தின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்து மற்றும் சிதைத்தல் பற்றிய தகவல்கள் கொம்ப்ரோலர் ஜெனரல் காரியாலயத்திற்கு சமர்ப்பிக்கப்படாமை.	கொம்ப்ரோலர் ஜெனரல் காரியாலத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 20223.08.24 தித்தியின் இலக்கம் 06/2023 சொத்து சுற்று நிருபத்தின்படி, தொடர்பான தகவல்கள் அறிக்கையிடப்பட்டுள்ளது. கொம்ப்ரோலர் ஜெனரல் காரியாலத்தினூடாக அவ்வப்போது கேட்கப்பட்ட தகவல்கள் சரியான முறையில் வழங்கப்பட்டுள்ளது.
இருப்பு வாகனங்கள் பற்றிய நாளாந்த பிராயாண குறிப்பு மற்றும் மாதாந்த சாராம்ச அறிக்கை கணக்காய்வாளர் தலைமையதிபதியிற்கு தெரிவிக்கப்படாமை.	குறித்த உத்தியோகத்தர்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சரியான முறையில் இருப்பு வானகங்களின் நாளாந்த பிராயாண குறிப்பு மற்றும் மாதாந்த சாரம்ச அறிக்கை கணக்காய்வாளர் தலைமையதிபதியிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.
வாகனமொன்று கண்டனம் செய்யப்பட்டு 8 மாதத்திற்கு குறைவான காலத்தில் சிதைக்கப்படாமை.	இல UP GN 8137, 43-3028,150-6038, 131-3049 வாகனங்கள் 2024.06.12 ஆம் திகதி சிதைக்கப்பட்டுள்ளது. ஏனைய வாகனங்கள் சிதைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
ஓராண்டிற்கு மேலாக கடன் இருப்பு நிலுவையாகவே தொடர்தல்.	• மாகாண சபை கடன் நிலுவை தற்போது வசூலித்து முடிவுற்றுள்ளது. • தாபான விதிக்கோவையின் XXIV ஆம் பந்தியின் 4.6 ஆம் பிரிவின்படி இறப்பெய்திய உத்தியோகத்தர்கள் இருவரின் கடன் இருப்பினை வசூலித்தல் தொடர்பாக சட்டமா அதிபரின் அறிவிறுத்தல் கேட்கப்பட்டுள்ளது. உத்தியோகத்தர் ஒருவரின் கடன் இருப்பு

செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது.

- பணி நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் இருவரின் கடன் நிலுவையினை செலுத்துதல் தொடர்பான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. உத்தியோத்தர் ஒருவரின் கடன் செலுத்தி முடிவுற்றுள்ளது.
- பணிவிலகளினை மேற்கொண்ட உத்தியோகத்தர் ஒருவரின் கடன் நிலுவையினை வசூலிக்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. உத்தியோகத்தர் ஒருவரின் கடன் முழுமையாக செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது.

கடன் இருப்பின் விபரம்

உத்தியோகத்தரின் பெயர்	2022.12.31 **ஆம் திகதியிற்கு இருப்பு**	2024.07.31 **ஆம் திகதியிற்கு இருப்பு**
மாகாண சபை W A ஜயசிங்ஹ	102,719.49	0
இறப்பெய்தியமை D D பியதாச SD கீர்த்திசிங்ஹ HWK ரஞ்சனி	784,190.40 227,203.20 61,600.00	784,190.40 227,203.20 0
பணிநீக்கம் D G C ஜயவர்தன A M சீலவதி JM ஹெட்டிஆரச்சி	36,579.00 231,400.00 171,356.64	0 183,900.00 162,356.64
பணிவிலகல் K M ஹம்சா W A K திலக்	13,864.23 230,658.00	0 230,658.00
மொத்தம்	1,859,570.96	1,588,308.24

காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாமை.	சம்பந்பட்ட துறைகளுக்கு அறிவிக்கப்பட்டு தீர்த்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளபட்டது மற்றும் தீர்க்க முடியாத வைப்புக்களை அரசாங்க கணக்கில் வரவு வைக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் காலாவதியான வைப்புக்கள் முழுவதும் தற்போது தீர்க்கப்பட்டது.
நி.பி 371 பிரகாரம் வழங்கப்பட்ட நிமித்த முற்பணம் விடயம் முடிவடைந்து 10 நாட்களுக்கு மேலாக தீர்க்கபடாது காணப்பட்டமை	நிமித்த முற்பணம், விடயம் முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டுமென குறித்த உத்தியோகத்தரிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பெற்றுக்கொள்ளப்பட்ட நிமித்த முற்பணத்தின் பெரும்பாலும் குறித்த விடயம் முடிவடைந்த உடன் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இணைத்துக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு புறம்பாக அனுமதிக்கபட்ட வரம்பினை மீறி பணியமர்த்தியமை.	இணைக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தவிர்ந்து அனுமதிக்கப்பட்ட வரம்பினை மீறி பணியமர்த்தப்படவில்லையென அறிவிக்கின்றேன்.
மாதாந்த மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடாத்தப்படாமை.	நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமையின் காரணமாக 2022 ஆண்டில் திட்டமிட்டபடி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடாத்த முடியாமை. 2023 ஆம் வருடத்தில் கூட்டத்தொடர் 08 மற்றும் 2024 ஆம் வருடம் தற்போது வரை கூட்டத்தொடர் 04 நடாத்தப்பட்டுள்ளது. மாவட்ட ஒருங்கிணைப்பு குழு நடாத்த மாதாந்தம் நடாத்த திட்டமிடபட்டிருப்பினும்

	மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தவிசாளரின் வேண்டுகோளின்படி அக்கூட்டம் இரத்து செய்யப்பட்டதோடு தொடர்ச்சியாக மாதாந்த ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடாத்தவும் தடையாகவுள்ளது.
மாவட்ட செயலாளரினால் பிரதேச செயலாளர்களை அழைத்து கூட்டப்படும் மாதாந்த ஆலோசனை கூட்டம் நடாத்தப்படாமை.	20204 ஆண்டின் சனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் பிரதேச செயலாளர்கள் அலோசனைக்கூட்டம் 03 நடாத்தப்பட்டதுடன் மே முதல் வாரத்திற்கு ஒரு முறை ZOOM தொழிநுட்பத்தினூடாக பிரதேச செயலாளலர்களை தொடர்பு கொண்டு அபிவிருத்தி திட்டங்களின் தேர்ச்சி மற்றும் தெரிவிக்க வேண்டிய விடயங்கள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது.
மாவட்ட வீடமைப்பு குழு மாதாந்தம் கூட்டப்படாமை.	மாவட்ட வீடைமைப்பு குழு கூட்டம் நடாத்துவதன் பொறுப்பு வீடமைப்பு அதிகார சபையின் பொறுப்பாகும், ஆகையால் மாதாந்த வீடமைப்பு குழு கூட்டம் நடாத்த வீடமைப்பு அதிகார சபைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.
மாவட்ட பசளை ஒருங்கிணைப்பு குழு கூட்டம் கூட்டப்படாமை.	சுற்று நிருபத்தின் அறிவுறுத்தலின்படி மாதாந்த கூட்டத்தினை நடாத்த குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 2024 ஆண்டில் தற்போது வரை மாவட்ட பசளை ஒருங்கிணைப்பு குழு கூட்டம் 07 நடாத்தப்பட்டுள்ளது.

மாவட்ட விலை நிர்ணய குழு மாதாந்தம் கூட்டப்படாமை.	நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாக அடிக்கடி விலை மாற்றம் ஏற்பட்டதால் விலை நிர்ணய குழு கூட்டம் மாதாந்தம் நடாத்தினாலும், தற்போது அவை வழமையாகிவிட்டதால் விலை நிர்ணய குழு கூட்டம் 06 மாததிற்கு ஒரு முறை நடாத்தினால் போதுமானதென தெரிவித்துக்கொள்கின்றேன்.
தயாரிக்கப்பட்ட மனித வள அபிவிருத்தி திட்டத்தினூடாக உத்தியோகத்தர் ஒருவரிற்கு வருடத்திற்கு 12 மணித்தியால மேலதிக பயிற்சி வழங்கப்படாமை.	இது குறித்து கவனஞ்செலுத்தப்பட்டு 2024 ஆம் ஆண்டில் பயிற்சித் திட்டம் திட்டமிடப்பட்டு நடாத்தப்படும்.
மாவட்ட மற்றும் பிரதேச போதைப்பொருள் தடுப்புக் குழு காலாண்டுக்கு 01 வீதம் கூட்டப்படாமை.	2024 ஆம் ஆண்டில் கடந்த 02 காலாண்டுக்குமான போதைப்பொருள் தடுப்பு குழு கூட்டம் 02 மற்றும் பிரதேச போதைப்பொருள் தடுப்புக்குழு கூட்டம் 21 நடாத்தப்பட்டுள்ளது.
சிறுவர் உரிமைகள் பற்றிய மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழு கூட்டம் காலாண்டுக்கு 01 வீதம் கூட்டப்படாமை.	உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. 2023 ஆண்டில் மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழு கூட்டம் 04 மற்றும் 2024 ஆண்டில் தறபோது வரை 02 நடாத்தப்பட்டுள்ளது.
திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்பங்களில் பெற்றுக்கொடுக்கப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களின் அளவு 50% குறைவாக காணப்பட்டமை.	2024 ஆண்டில் பயிற்சி திட்டத்தின் அமைவாக குறித்த பயிற்சி நிகழ்ச்சி திட்டம் நடாத்த தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது பயிற்சித் திட்டம் 08 நடாத்தப்பட்டுள்ளது.

அதிகபட்ச சேவைக்காலத்தை நிறைவு செய்த உத்தியோகத்தர்களினை முறையாக இடமாற்றம் செய்யப்படாது காணப்பட்டமை.	அதிபட்ச சேவைக்காலத்தினை நிறைவு செய்த உத்தியோகத்தர்கள் பற்றிய விபரம் மற்றும் சேவையின் அத்தியாவசியம் கருதி தக்கவைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பற்றிய விபரம் இடமாற்றல் சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளத்து. மொனராகலை மாவட்டத்திற்குள் குறைந்தளவான அரச நிறுவனங்கள் காணப்படுவதாலும் மற்றும் பிரதேச செயலகங்கள் இரண்டிற்கு இடையிலான தூர அளவு அதிகாமாயிருத்தலாலும், போக்குவரத்து வசதியின்மை போன்றவை இடமாற்றம் செய்யப்படாமைக்கு காரணமாகும். 2025 ஆண்டில் வருடாந்த இடமாற்றம் இடம்பெற்றதன் பின் இடமாற்றம் பெறாத , அதிபட்ச சேவைக்காலத்தினை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களினை உள்ளக இடமாற்றம் (பிரதேச் செயலகங்களுக்கு இடையில்) செய்ய தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
மாவட்ட சுற்றாடல் குழு குறைந்தபட்சம் 02 மாததிற்கு ஒரு முறை கூட்டப்படாமை.	2024 ஆண்டில் மாவட்ட சுற்றாடல் குழுக் கூட்டம் 03 நடாத்தப்பட்டுள்ளதுடன் தேவையின் அத்தியாவசியம் கருதி கூட்டம் கூட்டப்படும்.

மாவட்ட செயலாளலர் / அரசாங்க அதிபர்
மாவட்ட செயலகம்
மொனராகலை
R.M. Pasan S.B. Rathnayake
District Secretary/Government Agent
Monaragala

பிரதான கணக்காளர்
மாவட்ட செயலகம்
மொனராகலை
J.M.P. Siriwardhana
Chief Accountant
District Secretariat
Monaragala.

செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05.

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்